முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2023 சனவரி

## (304) நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல்

(Corporate & Personal Taxation)

2023-02-26
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**அஞ்சலா** ஒரு இலங்கைப் பிரசையாவார். அவர் 2021 யூன் 01 ஆந் திகதியிலிருந்து 2 வருட காலப்பகுதி ஒன்றிற்காக யப்பானிலுள்ள இலங்கை தூதரகத்தின் ஒரு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு டோக்கியோவிலுள்ள ஒரு தொடர்மாடிக் குடியிருப்பு வழங்கப்பட்டுள்ளதுடன் அவருடைய சம்பளம் மேலதிகப் படிகளுடன் இலங்கையிலுள்ள அவரது வங்கிக் கணக்கிற்கு தொடர்ச்சியாகச் செலுத்தப்படுகிறது. **அஞ்சலாவின்** கணவர் **திலின**வும் யப்பானில் அவருடன் தங்கியிருக்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி, வரிமதிப்பாண்டு 2021/22 இற்கு இலங்கையின் வரிவிதிப்பு நோக்கத்திற்காக **அஞ்சலாவின்** வதிவிட அந்தஸ்தை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

### வினா 02

**சுரேஸ்** என்பவர் ரூபா 10,000,000/- இற்கு 2018 அக்டோபர் 21 இல் கண்டியில் வெற்றுக் காணி ஒன்றைக் கொள்வனவு செய்திருந்தார். அதன்போது ரூபா 399,000/- இனை முத்திரைத் தீர்வையாகச் செலுத்தியிருந்ததுடன் ரூபா 100,000/- இனை சட்டத்தரணியின் கொடுப்பனவாக வழங்கியிருந்தார். கொள்வனவு செய்த சிறிது காலத்தின் பின்னர், அவர் காணியைச் சுற்றி ரூபா 500,000/- செலவில் எல்லைச் சுவரை (மதில்) அமைத்திருந்தார். அவர் அந்தக் காணியை 2021 டிசெம்பர் 15 ஆந் திகதி தனது உடன்பிறவா சகோதரர் ஒருவருக்கு ரூபா 15,000,000/- இற்கு விற்பனை செய்திருந்தார். விற்பனைத் திகதியில் அந்தக் காணியின் சந்தைப் பெறுமதி ரூபா 18,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) காணியின் விற்பனை மீது **சுரேஸால்** செலுத்தப்பட வேண்டிய மூலதன நய வரியைக் (Capital Gain Tax) **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **சுரேஸ்** மூலதன நய வரித் திரட்டினைச் சமர்ப்பிப்பதற்கான உரிய திகதியைக் **குறிப்பிடுக.** (01 புள்ளி)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட கருணாரத்ன கம்பனியின்** உதவிக் கணக்காளரான **அநுர** என்பவர் வரிமதிப்பாண்டு 2021/22 காலப்பகுதியில் சிறுநீரக மாற்று அறுவைச்சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார். அவர் கம்பனியின்பால் கொண்டிருந்த விசுவாசத்தைக் கவனத்திற் கொண்டு, **வரையறுக்கப்பட்ட கருணாரத்ன கம்பனியால்** மருத்துவக் கட்டணத்திற்கான பணம் **அநுரவுக்கு** மீளளிக்கப்பட்டது. மேலும், கம்பனியின் அனைத்து ஊழியர்களுக்கும் சமமான முறையிலான மருத்துவக் கட்டண மீளளிப்புகள் பொருத்தமானதல்ல.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட கருணாரத்ன கம்பனியிடமிருந்து** கிடைத்த மருத்துவக் கட்டண மீளளிப்பு **அநுரவின்** வரி விதிக்கத்தக்க வருமானத்தின் ஒரு பகுதியா என்பதை *Cribs Vs CIT* என்ற வழக்கையும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்ட ஏற்பாடுகளையும் தொடர்புபடுத்தி **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 04

(A) **வரையறுக்கப்பட்ட ரிவேஸ்டன் லெய்ஸர் (தனியார்) கம்பனி** சுற்றுலா ஹோட்டல் ஒன்றை இயக்குவதற்கு சுற்றுலா அபிவிருத்தி சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| வருமான வகை | ரூபா |
|---|---|
| அறைகளிலிருந்தான வருமானம் | 11,250,000 |
| மதுபானசாலை விற்பனைகள் | 3,300,000 |
| சேவைக் கட்டண வருமானம் | 2,250,000 |
| **மொத்த வருமானம்** | **16,800,000** |

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான சுற்றுலா அபிவிருத்தி வரியை (TDL) **மதிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) **சரத்** என்பவர் **ABC PLC** (கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் விலைகோரப்பட்ட கம்பனி) இன் 10,000 பங்குகளுக்குச் சொந்தக்காரர். அவர் பங்கொன்று ரூபா 140/- விலையில் அவரது தரகரான **வரையறுக்கப்பட்ட ஆசியா ஸ்டொக் புரோக்கர்ஸ் (தனியார்) கம்பனி** மூலம் 2022 சனவரி 12 இல் 5,000 பங்குகளை விற்பனை செய்துள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

**சரத்தினால்** செலுத்த வேண்டிய பங்குப் பரிமாற்ற வரியை (Share Transaction Levy) **கணிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட ருஷி அட்ஸ் (தனியார்) கம்பனி** விளம்பரப்படுத்தல் மற்றும் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள பெறுமதிசேர் வரிக்குப் (VAT) பதிவு செய்யப்பட்ட நபர் ஆகும். 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்கான கீழ்வரும் தகவல்கள் கம்பனியின் கணக்கேடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டில் ஈட்டப்பட்ட வருமான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன (VAT உள்ளடக்கப்படாத):

| | |
|---|---|
| இலங்கைக்கு வெளியே வழங்கப்பட்ட பயன்பாட்டுச் சேவைகளுக்காக வெளிநாட்டு சேவைநாடுநர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற வருமானம் *(வருமானமானது இலங்கை வங்கிக் கணக்கொன்றின் ஊடாக வெளிநாட்டு நாணயத்தில் கிடைக்கப்பெற்றது. 1 அமெரிக்க டொலர் = ரூபா 200/-)* | 150,000 அமெரிக்க டொலர் |
| உள்நாட்டு சேவைநாடுநர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் - SVAT | ரூபா 22,671,600 |
| உள்நாட்டு சேவைநாடுநர்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் - SVAT அல்லாத | ரூபா 44,868,400 |

(2) கம்பனி காலாண்டு காலப்பகுதியில் கீழ்வரும் உள்ளீட்டு வரிகளைச் செலுத்தியிருந்தது :

| | **ரூபா** |
|---|---|
| அலுவலகச் செலவினங்கள் மீது | 950,000 |
| விளம்பரப்படுத்தல் பொருள்களின் கொள்வனவு மீது | 1,264,000 |
| CEO இனால் பயன்படுத்தப்பட்ட மோட்டார் காருக்கான காப்புறுதித் தவணைக்கட்டணத்தின் மீது | 12,500 |

(3) முன்னைய காலாண்டிலிருந்து முன்கொணரப்பட்ட மிகை உள்ளீட்டு VAT தொகை ரூபா 486,000/-.

(4) காலப்பகுதியுடன் தொடர்புடைய சகல எளிமைப்படுத்தப்பட்ட VAT (SVAT) வரவு உறுதிச்சீட்டுகளும் (credit vouchers) சேகரிக்கப்பட்டன.

(5) கம்பனி மாதாந்த VAT தவணைக் கட்டணங்களாக ரூபா 500,000/- இனைச் செலுத்தியிருந்தது.

*(நியம VAT வீதம் 8% எனக் கொள்க.)*

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த காலாண்டிற்காகச் செலுத்த வேண்டிய மீதி / (மேலதிகமாகச் செலுத்திய) பெறுமதிசேர் வரியை (VAT) **மதிப்பிடுக.** (10 புள்ளிகள்)

## வினா 06

**வரையறுக்கப்பட்ட ரோஸி டெக்ஸ்டைல்ஸ் (தனியார்) கம்பனி** ஆடைக் கடை ஒன்றை நடத்திவருகின்ற இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். இது மதிப்பிடப்பட்ட வரிப் பரிப்பு ரூபா 3,500,000/- உடனான வரிமதிப்பாண்டு 2021/22 இற்காகச் செலுத்த வேண்டிய மதிப்பிடப்பட்ட வரிக் கூற்றினைச் (SET) சமர்ப்பித்திருக்கிறது. இது ரூபா 1,800,000/- இனை முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுத் தவணைக் கட்டணங்களாகச் செலுத்தியிருக்கிறது. கம்பனியால் எதிர்நோக்கப்பட்ட நிதி நெருக்கடி காரணமாக இதன் பின்னர் எவ்வித கொடுப்பனவுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

உதவி ஆணையாளர் மூன்றாவது தவணைக் கொடுப்பனவுக்கான நினைவூட்டல் ஒன்றை வழங்கி யிருக்கிறார். கம்பனியானது எதிர்காலத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கான அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியாக உங்களை நியமிப்பதற்கு விரும்புகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான மூன்றாவது தவணைக் கொடுப்பனவாகச் செலுத்த வேண்டிய தொகையைக் **கணிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான வருமான வரி தவணைக் கொடுப்பனவுகளின் உரிய திகதிகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) தாமதக் கொடுப்பனவு காரணமாக விதிக்கப்படக்கூடிய தண்டங்களைத் தவிர்ப்பதற்கு கம்பனியால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை ஒன்றைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(d) உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தவறிய வரிகளை வசூலிக்கின்ற இரண்டு (02) முறைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**லா பெஷன்** என்பது கொழும்பில் அழகு நிலையமொன்றை நடத்திச் செல்லும் **நெலும்** மற்றும் **மானெல்** என்ற இரு சகோதரிகளால் முன்னெடுக்கப்படும் ஒரு பங்குடமை ஆகும். அவர்கள் இலாப நட்டங்களை முறையே 1 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ள இணங்கியுள்ளனர்.

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பொழிப்பாக்கப்பட்ட வருமானக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது :

| | ரூபா |
|---|---|
| மொத்த இலாபம் | 9,250,000 |
| பிற வருமானம் | 550,000 |
| | **9,800,000** |
| கழி: நிருவாக மற்றும் பிற செலவினங்கள் | (4,125,000) |
| **பங்குடமையின் நிகர இலாபம்** | **5,675,000** |

மேலுள்ள இலாபத்தைக் கணிக்கும்போது கீழ்வரும் செலவினங்கள் கழிக்கப்பட்டுள்ளன :

(1) இரு பங்காளர்களும் மாதாந்தச் சம்பளமாக ரூபா 150, 000/- எடுக்கின்றனர்.

(2) **நெலும்** பங்குடமைக்கு ரூபா 800,000/- தொழிற்படு மூலதனக் கடனொன்றை வழங்கியிருந்தார். இதன் பொருட்டு ரூபா 120,000/- வட்டியாகச் செலுத்தப்பட்டுள்ளது.

(3) **மானெல்** இன் மகள் வார இறுதி நாட்களில் உதவியாளராக பணியாற்றியதுடன் இதற்கான கொடுப்பனவாக ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 260,000/- **மானெல்** இற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

(4) முதியோர்களை நிறுவன ரீதியில் கவனிப்பதற்கான ஏற்பாடுகளுக்காகத் தாபிக்கப்பட்ட அங்கீகரிக்கப் பட்ட தரும ஸ்தாபனம் ஒன்றிற்கு ரூபா 100,000/- காசு நன்கொடையாக அளிக்கப்பட்டது.

(5) பிற வருமானமானது சேமிப்புக் கணக்கிற்கான வட்டியாக வங்கியிலிருந்து கிடைத்த ரூபா 200,000/- இனையும் மீதியானது அழகுசாதனப் பொருள்களின் விற்பனை மூலம் கிடைத்த வருமானத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

வரிமதிப்பாண்டு 2021/22 இற்காக பங்குடமை செலுத்த வேண்டிய வருமான வரியை **மதிப்பிடுக.**

(10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

**வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனி** ஏற்றுமதிச் சந்தைக்காக கைவினைப் பொருள்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள, இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும்.

கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனியின்** நிதிக் கூற்றுக்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) சகல செலவினங்களும் தாக்கல் செய்யப்பட்டு, சகல வருமானங்களும் வரவு வைக்கப்பட்ட (crediting) பின்னர், 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வரிக்கு முன்னரான நிகர இலாபம் ரூபா 21,450,000/- ஆகும். கம்பனியின் மொத்தப் புரள்வு ரூபா 430,500,000/-.

(2) பிற வருமானங்களின் கூறுகள் :

| | ரூபா |
|---|---|
| விலைகோரப்பட்ட பங்குகளின் விற்பனை மீதான இலாபம் | 1,230,000 |
| நிலையான வைப்புகளிலிருந்தான வட்டி வருமானம் | 2,395,000 |
| பங்கிலாப வருமானம் - பெற்ற பங்கிலாபத்திலிருந்து | 3,840,000 |
| கணினி மேசைகளின் விற்பனை மீதான இலாபம் | 25,000 |

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரண விபரங்கள் கீழ்வருமாறு :

| சொத்துக்கள் (கிரயம்) | 2021.04.01 இல் மீதி (ரூபா) | சேர்ப்பனவுகள் / கொள்வனவுகள் (ரூபா) | விற்பனைகள் (ரூபா) | 2022.03.31 இல் மீதி (ரூபா) |
|---|---|---|---|---|
| காணி | 2,420,000 | - | - | 2,420,000 |
| அலுவலகக் கட்டடம் | 8,250,000 | - | - | 8,250,000 |
| மோட்டார் வாகனங்கள் | 14,870,000 | 5,500,000 | - | 20,370,000 |
| தளபாடமும் பொருத்துகளும் | 3,270,000 | - | 900,000 | 2,370,000 |
| **மொத்தம்** | **28,810,000** | **5,500,000** | **900,000** | **33,410,000** |

- ஊழியர்களின் போக்குவரத்திற்காக ஆண்டின் காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட 20 இருக்கைகளைக் கொண்ட சிறிய ரக பேருந்து ஒன்றைத் தவிர ஏனைய அனைத்து மோட்டார் வாகனங்களும் விநியோக வான்களையும் லொறிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

- வரிமதிப்பாண்டு 2018/19 இல் வாங்கப்பட்ட பல கணினி மேசைகள் ரூபா 600,000/- இற்கு விற்பனை செய்யப்பட்டன.

- விசேடமாகக் குறிப்பிடப்பட்டவை தவிர 2021 ஏப்ரல் 01 இல் உள்ள ஏனைய சகல சொத்துக்களும் வரிமதிப்பாண்டு 2019/20 இல் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் கொள்வனவுத் திகதியிலிருந்து மூலதன விடுதொகை கோரப்பட்டிருந்தன.

(4) நிருவாகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- ஆண்டிற்கான தேய்மானக் கட்டணம் ரூபா 4,150,000/-.
- ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 2,190,000/-.
- அலுவலகக் கட்டடத்தின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்காக ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 300,000/- செலவிடப்பட்டது.

(5) விநியோகச் செலவினங்கள் கீழ்வருவனவற்றை உள்ளடக்குகின்றன :

- வரிமதிப்பாண்டு காலப்பகுதியில் சமூக ஊடகங்களில் முன்னெடுக்கப்பட்ட விளம்பரப்படுத்தற் செயற்பாடுகளுக்காக ரூபா 1,900,000/- செலவிடப்பட்டது.
- கம்பனியானது வாடிக்கையாளர்களை மகிழ்விப்பதற்காக ரூபா 1,425,000/- இனைச் செலவு செய்திருந்தது.
- கம்பனியானது கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு ரூபா 2,400,000/- பெறுமதியான கற்றல் உபகரணங்களை நன்கொடையாக வழங்கியிருந்தது.
- உற்பத்திச் செயன்முறையின் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான ஆய்வொன்றிற்கு கம்பனி ரூபா 1,500,000/- இனைச் செலவிட்டிருந்தது.

(6) வரிமதிப்பாண்டு 2021/22 இற்காக சுய மதிப்பீட்டு அடிப்படையில் செலுத்தப்பட்ட வரிகள் ரூபா 1,500,000/-.

(7) வணிகத்தின் ஏனைய சகல செலவினங்களும் வருமான வரி நோக்கங்களுக்காக அனுமதிக்கப் பட்டுள்ளன.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2021/22 இற்காக **வரையறுக்கப்பட்ட சூரியா (தனியார்) கம்பனியின்** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக** :

(a) வரிமதிக்கத்தக்க வருமானம்

(b) வரிவிதி வருமானம்

(c) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி

(d) செலுத்த வேண்டிய மீதி வருமான வரி

*(குறிப்பு: ஏதாவது செலவுகளை அனுமதிப்பதற்கான அல்லது அனுமதிக்காது விடுவதற்கான காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

## வினா 09

வதிவுள்ள தனியாளான **ரஞ்சனி** என்பவர் ஒரு பட்டயக் கணக்காளராவார். அவர் இலங்கையிலுள்ள கம்பனியொன்றில் பிரதம நிதி அதிகாரியாகப் பணியாற்றுகிறார்.

**ரஞ்சனி** தொடர்பில் வரிமதிப்பாண்டு 2021/22 *(இதன் பின்னர் 'ஆண்டு' என அழைக்கப்படும்)* இற்கான கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) ஊழியத்திலிருந்தான வருமானம் :

- மொத்தச் சம்பளம் - மாதாந்தம் ரூபா 350,000/-.
- ஒரு மாதச் சம்பளத்திற்குச் சமனான தொகையொன்று மிகையூதியமாக 2021 ஏப்ரலில் செலுத்தப்பட்டது.
- கம்பனி அவருக்கு எரிபொருளுடன் மோட்டார் கார் (1000 cc) ஒன்றை வழங்கியிருந்தது.
- அவர் ரூபா 40,000/- மாத வாடகை செலுத்தி, கொட்டாவையில் உள்ள வாடகை வீடொன்றில் வசிக்கிறார். கம்பனி இதன் பொருட்டு மாதாந்தம் ரூபா 30,000/- இனை மீளளிப்புச் செய்கிறது.
- ஆண்டின் காலப்பகுதியில் குழுமத்தின் பிராந்திய மாநாடொன்றில் பங்குபற்றுவதற்காக கம்பனியைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கம்பனியால் அவர் தென் கொரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்தப் பயணத்திற்கான செலவு ரூபா 350,000/- கம்பனியால் மீளளிப்புச் செய்யப்பட்டது.
- **ரஞ்சனி** முற்பண தனிநபர் வருமான வரியை (APIT) கழிப்பதற்கு தனது சம்மதத்தை வெளிப்படுத்தியிருந்தார். ஆண்டிற்காகக் கழிக்கப்பட்ட வரி ரூபா 143,400/-.

(2) அவர் கணக்கீட்டு நிறுவனமொன்றை நடத்திச் செல்வதுடன் நிறுவனத்தின் ஆண்டிற்கான வருமான, செலவின விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| சேவைநாடுநர்களிடமிருந்தான வருமானம் | | 5,870,000 |
| கழி: கொடுப்பனவுகள் | | |
| உதவியாளருக்கான சம்பளம் | 900,000 | |
| காகிதாதிகள் | 465,000 | |
| கணினி மீதான தேய்மானம் (ஆண்டின் காலப்பகுதியில் ரூபா 240,000/- இற்கு கொள்வனவு செய்யப்பட்டது.) | 60,000 | (1,425,000) |
| **நிகர இலாபம்** | | **4,445,000** |

(3) அவருடைய சொந்த வீடு மத்துகம பிரதேசத்தில் அமைந்துள்ளது. அது ரூபா 30,000/- மாதாந்த வாடகைக்கு விடப்பட்டுள்ளது. இந்த வீட்டின் சோலைவரி மதிப்பீடு ரூபா 150,000/-. சோலைவரி 25% இல் வாடகைக்குக் குடியிருப்பவரால் செலுத்தப்படுகிறது.

(4) ஆண்டின் காலப்பகுதியில், **ரஞ்சனி** கீழ்வரும் வட்டி வருமானத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார் :

- LKR நிலையான வைப்புகள் மீது ரூபா 245,300/-.
- வதிவுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கு (RFC) மீது ரூபா 1,200,000/-.

(5) **ரஞ்சனி** ஆண்டின் காலப்பகுதியில் கீழ்வரும் கொடுப்பனவுகளைச் செய்திருந்தார் :

- மருத்துவக் காப்புறுதி ஒன்றிற்கான பங்களிப்பு ரூபா 300,000/-.
- வரியியல் தொடர்பான ஆறு மாத காலப் பாடநெறியொன்றைப் பின்பற்றுவதற்கு உள்நாட்டு நிறுவகம் ஒன்றிற்குச் செலுத்திய கட்டணம் ரூபா 50,000/-.

(6) ஆண்டின் காலப்பகுதியில், இலங்கை பௌத்த, பாலிப் பல்கலைக்கழகத்திற்கு ரூபா 500,000/- பெறுமதியான புத்தகங்களை அவர் நன்கொடையாக வழங்கியதுடன் அங்கவீனம் அடைந்தவர்களைப் பராமரிக்கின்ற தரும ஸ்தாபனமொன்றிற்கு ரூபா 100,000/- பெறுமதியான பொருள்களையும் நன்கொடையாக வழங்கியிருந்தார்.

(7) **ரஞ்சனி** வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான தவணைக் கொடுப்பனவுகளாக ரூபா 300,000/- இனை செலுத்தியிருந்தார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

வரிமதிப்பாண்டு 2021/22 இற்கு **ரஞ்சனிக்காக** கீழ்வருவனவற்றை **மதிப்பிடுக**:

(a) வரிவிதி வருமானம்.

(b) செலுத்த வேண்டிய மொத்த வருமான வரி.

(c) செலுத்த வேண்டிய / (மேலதிகமாகச் செலுத்திய) மீதி வருமான வரி

(d) வரிவிலக்கு வருமானம், ஏதாவது இருப்பின்.

*(**குறிப்பு:** ஏதாவது வருமானம் விரிவிதிக்கத்தக்கது அல்ல எனின், அதனைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.)* (25 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |